ITI
Admission
2016

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை

# தமிழ் நாடு அரசு

## வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனரகம்

**Apply Online : www.skilltraining.tn.gov.in**

# தொழிற்பயிற்சி

# சேர்க்கை-2016

## மாவட்ட கலந்தாய்வு மூலம்
## அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில்
## மாணவர் சேர்க்கைக்கான தகவல் மற்றும் அறிவுரைகள்

# Prospectus

Department of Employment and Training ( Training wing)
Alanthur Road, Guindy, Chennai-32

# தொழிற்பயிற்சி சேர்க்கை 2016

## அட்டவணை / Index


| வரிசை எண் | விளக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | பொது அறிவுரைகள் | 3 |
| 2 | பயிற்சி காலம் | 3 |
| 3 | கல்வித்தகுதி | 3 |
| 4 | வயது வரம்பு | 4 |
| 5 | இட ஒதுக்கீடு | 4 |
| 6 | சிறப்பு இனத்தவருக்கான ஒதுக்கீடு | 4 |
| 7 | முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் | 5 |
| 8 | உடல் தகுதி | 5 |
| 9 | மாவட்ட கலந்தாய்வு | 5 |
| 10 | விண்ணப்பிக்கும் முறை | 5 |
| 11 | விண்ணப்பிக்க கடைசி தேதி | 6 |
| 12 | மாவட்ட கலந்தாய்வு சேர்க்கை முறை | 6 |
| 13 | தரவரிசையில் சமநிலை மதிப்பெண் | 7 |
| 14 | சான்றிதழ் சரிபார்ப்பு | 7 |
| 15 | பயிற்சிக் கட்டண விவரம் | 7 |
| 16 | விடுதி வசதி | 7 |
| 17 | **சலுகைகள்** | 8 |
| 18 | முக்கிய அறிவுரைகள் | 8 |
| 19 | SCVT தொழிற்பயிற்சி நிலையங்கள் | 8 |
| 20 | மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் இடங்கள் | 10 |
| 21 | பொறியியல் பிரிவு 8-ம் வகுப்பு தேர்ச்சி | 11 |
| 22 | பொறியியல் பிரிவு 10-ம் வகுப்பு தேர்ச்சி | 11 |
| 23 | SCVT பொறியியல் பிரிவு 10-ம் வகுப்பு தேர்ச்சி | 12 |
| 24 | பொறியியல் அல்லாத பிரிவு 8-ம் வகுப்பு தேர்ச்சி | 12 |
| 25 | பொறியியல் அல்லாத பிரிவு 10-ம் வகுப்பு தேர்ச்சி | 13 |
| 26 | SCVT பொறியியல் அல்லாத பிரிவு 10-ம் வகுப்பு தேர்ச்சி | 13 |
| 27 | SCVT பொறியியல் அல்லாத பிரிவு 12-ம் வகுப்பு தேர்ச்சி | 13 |
| 28 | PPP & CoE தொழிற்பிரிவுகள் | 14-15 |
| 29 | (BTC) அடிப்படை பயிற்சி மைய தொழிற் பிரிவுகள் | 15-17 |
| 30 | மாவட்ட வாரியாக அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை தொழிற்பிரிவுகளுடன் அறிந்து கொள்ள.. இங்கே கிளிக் செய்யவும் | Home Page "View ITI Details" menu Click Here |

# தொழிற் பயிற்சி சேர்க்கை 2016

## பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை

## மாணவர்களுக்கான சேர்க்கை தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவுரைகள்

**மாவட்ட கலந்தாய்வு மூலம் சேர்க்கைக்கு ஒரு மாவட்டத்திற்கு ஒரு பொது விண்ணப்பம் மட்டும் இணைய தளத்தில் சமர்ப்பித்தால் போதுமானது.**

### 1. பொதுஅறிவுரைகள் / General Information

இந்த விளக்கக் குறிப்பேட்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் மாணவர்களுக்கான பொது தகவல் மற்றும் சேர்க்கை தொடர்பான விவரங்கள் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் சேர்க்கை தொடர்பான விவரங்களை கவனத்துடன் படித்து தெரிந்து கொள்ளவும்.

தமிழ் நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அடிப்படை பயிற்சி மையங்களில் நடத்தப்படும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் மாணவர் சேர்க்கை **மாவட்ட கலந்தாய்வு மூலம்** மேற்கொள்ளப்படும்.

மாவட்ட கலந்தாய்வு சேர்க்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மட்டுமே நடைபெறும்.

இணையதளத்தின் மூலம் மாணவர்கள் விண்ணப்பத்தை மட்டுமே பதிவு செய்யலாம். மாவட்ட கலந்தாய்வு தொடர்பான விவரங்களுக்கு மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் தொழிற்பயிற்சி நிலையத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

### 2. பயிற்சி காலம்:

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொாழிற்பிரிவுகள் ஒருவருடம் மற்றும் இரண்டு வருடம் வரை தொழிற்பிரிவுகளுக்கு ஏற்ப பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒருவருட தொழிற்பிரிவு, இரண்டு பருவமுறைகளையும் (Two Semesters), இரண்டு வருட தொழிற்பிரிவு 4 பருவமுறைகளையும் (Four Semesters) கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு பருவமுறை (Semesters) முடிவிலும் அகில இந்திய தொழிற் தேர்வு நடைபெறும். தொழிற்பிரிவுகள் விவரம், பயிற்சிக்கால அளவு, சேர்க்கைக்கான கல்வித்தகுதி ஆகிய விவரங்கள் பகுதி 1 முதல் 4 வரை உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தொழிற்பிரிவுகளில் வழங்கப்படும் பயிற்சிகள் மத்திய அரசின் தேசிய பயிற்சிக் குழுமத்தின் (NCVT) அங்கீகாரத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. பயிற்சி ஓவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் முதல் தேதியிலிருந்து தொடங்கும். **பயிற்சி முடிவில் ஒவ்வொரு பருவ தேர்வுகளிலும் தேர்ச்சி பெறுபவர்களுக்கு (NCVT) அங்கீகாரம் பெற்ற தேசிய தொழிற் சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

### 3. கல்வித்தகுதி:

1. 8-ம் வகுப்பு தேர்ச்சி – குறிப்பிட்ட சில தொழிற்பிரிவுகளுக்கு மட்டும் 8-ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (தொழிற்பிரிவுகள் விபரம் பகுதி-1 மற்றும் பகுதி-2ல் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ளது). **பள்ளிகளில் முறையாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**
2. **8-ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் சேர்க்கைக்கு 8-ம் வகுப்பு மதிப்பெண் மட்டுமே கணக்கில் கொள்ளப்படும். இத்தகைய தொழிற்பிரிவுகளுக்கு 10–ம் வகுப்பு மதிப்பெண் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.** எனவே 8-ம் வகுப்பு தொழிற்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 8-ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலை சம்மந்தப்பட்ட பள்ளியிலிருந்து பெற்று கண்டிப்பாக இணைக்க வேண்டும்.
3. 10-ம் வகுப்பு தேர்ச்சி தொழிற்பிரிவுகள் விவரம் தொழிற்பிரிவுகள் விபரம் பகுதி-1 மற்றும் பகுதி-2ல் இணைப்பு 2-ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை / Back to Index

4. பொறியியல் தொழிற்பிரிவுகளின் சேர்க்கைக்கு – தகுதியான தேர்வுகளில் (8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி) கணிதம் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளின் சராசரி மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ச்சி செய்யப்படுவர்.
5. பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் சேர்வதற்கு மாணவர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் சேர்க்கை மேற்கொள்ளப்படும்.

## 4. வயது வரம்பு:

| வ.எண் | பொருள் | வயது: |
|---|---|---|
| 1 | பகிரங்கப்போட்டி (OC) | 14 முதல் 40 வயது வரை |
| 2 | பிற்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர்(BC/MBC/DNC) | 14 முதல் 40 வயது வரை |
| 3 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் /பழங்குடியினர்(SC/ST) | 14 முதல் 40 வயது வரை |
| 4 | முன்னாள் இராணுவத்தினர் | 45 வயது வரை |
| 5 | மாற்றுத் திறனாளிகள் | 40 வயது வரை |
| 6 | போரில் இறந்த இராணுவ வீரரின் மனைவி | குறைந்தபட்ச வயது 14<br>வயது உச்சவரம்பு - இல்லை |
| 7 | விதவை /கணவரால் கைவிடப்பட்டோர் | குறைந்தபட்ச வயது 14<br>வயது உச்சவரம்பு - இல்லை |
| 8 | மகளிர் | குறைந்தபட்ச வயது 14<br>வயது உச்சவரம்பு - இல்லை |

## 5. இட ஒதுக்கீடு :

| வ.எண் | பொருள் | இட ஒதுக்கீடு: |
|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (SC) | 15 சதவீதம் |
| 2 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்)(SCA) | 3 சதவீதம் |
| 3 | பழங்குடியினர் (ST) | 1 சதவீதம் |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர்(MBC/DNC) | 20 சதவீதம் |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(BC) | 26.5 சதவீதம் |
| 6 | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர்(BCM) | 3.5 சதவீதம் |
| 7 | பகிரங்க போட்டி | 31 சதவீதம் |

## 6. சிறப்பு இனத்தவருக்கான ஒதுக்கீடு :

| | | |
|---|---|---|
| முன்னாள் இராணுவத்தினர் வாரிசுதாரர்<br>**(ஒரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு)** | 5<br>இருக்கைகள் | உபரி(SN)<br>இருக்கைகளில்<br>ஒதுக்கப்படும். |
| மாற்றுத் திறனாளிகள் | 3 சதவீதம் | இன ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.<br>ஒப்பளிக்கப்பட்ட மொத்த இருக்கைகளிலிருந்து கணக்கிடப்படும். |
| மகளிர் | 30 சதவீதம் | |
| உயர்நிலைப்பள்ளிகளில் மாநில அளவு விளையாட்டு போட்டிகளில் முதன்மையாக வரும் மாணவ, மாணவியருக்கு | 1 சதவீதம் | |
| தாய் தந்தை இழந்த மாணவருக்கு | 2 சதவீதம் | |

**குறிப்பு : நிறப்பப்படாத உபரி (SN) இருக்கைகள் வ.எண்.5-ல் தரப்பட்டுள்ள தமிழக அரசின் இன ஒதிக்கீட்டு விதிமுறைப்படி நிறப்பப்படும்.**

அட்டவணை / Back to Index

## 7. முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்

முன்னாள் இராணுவத்தினர் வாரிசுதாரர் முன்னாள் படை வீரர் நல இயக்கக உதவி இயக்குநர் சான்றொப்பத்துடன் உரிய சான்றிதழ் கலந்தாய்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் இவர்களுக்கு 5 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாணவர் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் தொழிற்பிரிவு ஒதுக்கப்படும். இது உபரி (SN) இருக்கைகளில் ஒதுக்கப்படும்.

## 8. உடல் தகுதி :

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மருத்துவ சான்றிதழின் பேரில் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். மருத்துவ சான்றிதழின்படி உடல் தகுதியற்றோர்கள் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

மாற்றுத் திறனாளிகள் ஊனத்தின் தன்மையைப் பொறுத்து உரிய தொழிற் பிரிவுகளில் சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படுவர். மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே இவர்களது சேர்க்கை பரிசீலிக்கப்படும். சேர்க்கைக்கு முன்னர் சேர்க்கை நடைபெறும் தொழிற்பயிற்சி நிலையத்தில் மருத்துவர் முன்னர் ஆஜராகி, மருத்துவர் அளிக்கும் சான்றிதழின்படி மட்டுமே இவர்களுக்கு தொழிற்பிரிவுகள் ஒதுக்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் தங்களின் ஊனத்தன்மையை விளக்கும் வகையில் 125 X 75 மி.மீ. நிழற்படத்தை முடவியல் (Ortho) மருத்துவரின் உரிய சான்றிதழ் பெற்று கலந்தாய்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

## 9. மாவட்ட கலந்தாய்வு :

ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அடிப்படை பயிற்சி மையங்களின் சேர்க்கை அந்த மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மட்டும் மாவட்ட கலந்தாய்வு முறையில் மேற்கொள்ளப்படும்.

தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை பொறுத்த வரையில் கலந்தாய்வுக்கு விருப்பம் தெரிவித்துள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும், துறைவாரியான ஆய்வுகளில் பரிந்துரைக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மட்டுமே கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்படும்.

ஒரு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையம் தவிர வேறு எந்த தொழிற்பயிற்சி நிலையத்திலும் சேர்க்கை நடவடிக்கைகள் நடைபெறாது. எனவே, மாணவர்கள் சேர்க்கைக்காக அந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மட்டுமே கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டும். கலந்தாய்வுக்கான அழைப்புக் கடிதம் கலந்தாய்வு நடத்தும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் மூலம் அனுப்பிவைக்கப்படும். மாவட்டக் கலந்தாய்வில் கலந்துகொண்டு அந்த மாவட்டத்தில் சேர விரும்பும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற் பிரிவினை மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் தயாரிக்கப்படும் தரவரிசையின்படி மாணவர் தேர்வு செய்து கொள்ளலாம்.

**இத்துடன் இணையதளத்தில் தரப்பட்டுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் பட்டியல் தகவலுக்காக மட்டுமே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் கலந்தாய்வில் கலந்துக் கொள்ளும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மண்டலப் பயிற்சி இணை இயக்குநர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்பட்டு இயக்குநரின் ஒப்புதலுக்குப் பிறகே மாவட்டக் கலந்தாய்வில் சேர்க்கப்படும். இதில் தரப்பட்டுள்ள தகவல்களை வைத்து தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள உரிமை கோர இயலாது.**

## 10. விண்ணப்பிக்கும் முறை :

அ. மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மாணவர் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

ஆ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாணவர்கள் இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்

இ. ஒரு மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அடிப்படை பயிற்சி மையங்களுக்கு மாவட்ட கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெற ஒரு மாவட்டத்திற்கு ஒரு விண்ணப்பம் மட்டும் சமர்ப்பித்தல் போதுமானது.

ஈ. பூர்த்தி செய்யப்பட்ட இணையதள விண்ணப்பத்தில் சேர்க்கை தேவைப்படும் மாவட்டத்தை தெரிவு செய்து சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பம் எந்த மாவட்டத்தில் பெறப்படுகிறதோ அந்த மாவட்ட கலந்தாய்விற்கு மட்டுமே பரிசீலிக்கப்படும்.

உ. மாவட்ட கலந்தாய்வு மூலம் சேர்க்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மட்டுமே நடைபெறும். மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் விவரம் வரிசை எண் 20-ல் தரப்பட்டுள்ளது.

ஊ. ஒரு மாணவர் பல மாவட்டங்களில் விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி இணையதள விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 11. விண்ணப்பிக்க கடைசி தேதி 20-06-2016

**12. மாவட்ட கலந்தாய்வு சேர்க்கை முறை :**

அ. பொறியியல் தொழிற்பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்கள் தகுதித்தேர்வில் (8-ம் வகுப்பு அல்லது 10-ம் வகுப்பு) கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் பெற்ற மதிப்பெண்களின் சராசரி மதிப்பெண் அடிப்படையில் தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

ஆ. பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுக்கு தகுதித் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

இ. தர வரிசைப் பட்டியலின்படி மாணவர்கள், மாவட்டத்திலுள்ள கலந்தாய்வு நடைபெறும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு கலந்தாய்வுக்கு அழைக்கப்படுவர்.

ஈ. சம்பந்தப்பட்ட மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்படும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் அரசு தொழிற் பயிற்சி நிலைய தகவல் பலகையில் ஒட்டப்படும்.

உ. கலந்தாய்வு நடைபெறும் தேதி, இடம், நேரம் ஆகிய விவரங்கள் ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

ஊ. மாணவர்கள் தங்களது தெளிவான முகவரியை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் (Pincode) இணையதள விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். இதன் மூலம் கலந்தாய்வு அழைப்பு தபால்கள் சிரமமின்றி உடன் கிடைக்க ஏதுவாக இருக்கும். கலந்தாய்வுக்கு வரும்போது - விண்ணப்பக் கட்டணம் (Application Fee)-ரூ.50/-, மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate), மதிப்பெண் பட்டியல் (Mark Sheets), சாதிச் சான்றிதழ் (Community Certificate), வண்ண நிழற்படம் (Colour Photo)-5எண்கள் ஆகியவற்றை தவறாமல் கொண்டுவரவேண்டும்.

எ. கலந்தாய்வு தேதியன்று தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள இருக்கை நிலவரங்கள் கலந்தாய்வு நடைபெறும் அரசு தொழிற்பயிற்சி நிலைய அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும். மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஏ. கலந்தாய்வுக்கு குறிப்பிட்ட தேதியில் மற்றும் நேரத்தில் வரத்தவறினால் தரவரிசையை இழக்க நேரிடும். கலந்தாய்வின் போது தாமதமாக மாணவர் வருகை தந்தால் காலியாக உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தையும் தொழிற்பிரிவையே தேர்வு செய்ய இயலும். **மாணவரது முந்தைய தரவரிசைப்படி உரிமை கோர இயலாது.**

ஐ. கலந்தாய்வு தேதியில் தவிர்க்க இயலாத காரணங்களால் வரத் தவறினால், கலந்தாய்வு நடைபெறும் மற்ற நாளில் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் அப்போதைய நிலவரப்படி காலியாக உள்ள தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவையே மாணவர் தேர்ந்தெடுக்க இயலும். இத்தகைய மாணவர்கள் தங்களது ஆரம்ப நிலை தரவரிசைப்படி இடம் தேர்வு செய்ய உரிமை கோர இயலாது.

ஒ. தவிர்க்க இயலாத காரணத்தால் கலந்தாய்வுக்கு நேரடியாக வர இயலாத நேர்வில் மாணவர் சார்பாக பெற்றோர் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். இதற்கான ஒப்புதல் கடிதத்தை மாணவரிடமிருந்து பெற்றோர் பெற்று வர வேண்டும். வருகை தந்துள்ள பெற்றோர் / பாதுகாவலர் தேர்வு செய்யும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவே இறுதியானது. இதற்கு மாணவர் ஒப்புதல் தந்ததாகக் கருதப்படும்.

ஓ. கலந்தாய்வின்போது தேர்வு செய்த தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவு இறுதியானது. அன்றைய தினமே, சேர்க்கை அனுமதி ஆணை வழங்கப்படும். இதன்படி மாணவர் சேர்க்கை பெறப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கை அனுமதி ஆணையில் குறிப்பிட்ட நாளில் பயிற்சியல் சேர வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேராதவர்கள் பின்னர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார். இந்த இடம் காலியிடமாக கருதப்பட்டு வேறு தகுதியான நபருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

அட்டவணை / Back to Index

### 13. தரவரிசையில் சமநிலை மதிப்பெண் :

தர வரிசையில் சமநிலை மதிப்பெண் பெறும் மாணவர்களிடையே கீழ்கண்டவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

1. கணித மதிப்பெண்
2. அறிவியல் மதிப்பெண்
3. மொத்த மதிப்பெண்
4. பிறந்த தேதி (அதிக வயதுக்கு முன்னுரிமை)

### 14. சான்றிதழ் சரிபார்ப்பு :

மாணவர் சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் 8–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தின் மூலம் சரிபார்க்கப்படும்.

10-ம் மற்றும் 12-ம் வகுப்பு சான்றிதழ் பள்ளிக் கல்வித்துறை மூலம் சரிபார்க்கப்படும். தவறான சான்றிதழ் சமர்ப்பிக்கும் நேர்வில், சம்பந்தப்பட்ட மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படும். மேலும், சம்பந்தப்பட்ட மாணவரின் மீது உரிய கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 15. பயிற்சிக் கட்டண விவரம் :

கீழ்கண்ட கட்டணங்களை மாணவர்கள் பயிற்சியில் சேரும்போது செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பயிற்சிக்கட்டணம் (Tution Fee) | ஏதும் இல்லை |
| 2 | காப்புத் தொகை (Caution Deposit) | ரூ.100 (பயிற்சியின் முடிவில் திரும்ப வழங்கப்படும்) |
| 3 | விளையாட்டுப் போட்டி மற்றும் சம்பந்தப்பட்ட கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு (Sports Fee) | ரூ.10 |
| 4 | பதிவுக் கட்டணம் (Registration fee) | ரூ.25 |
| 5 | 12th, 10th, 8th மதிப்பெண் சான்றிதழ் சரிபார்க்கும் கட்டணம் (Certificate verification fee) (ஒரு சான்றிதழ்க்கு) | ரூ.50 |
| 6 | விண்ணப்பக் கட்டணம் (Application Fee) (கலந்தாய்வின் போது கட்ட வேண்டும்) | ரூ.50 |

### 16. விடுதி வசதி:

குறிப்பிட்ட சில அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மட்டுமே விடுதி வசதி உள்ளது. விடுதியில் உள்ள இட வசதியை பொறுத்து மாணவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர்.

| | | |
|---|---|---|
| 1 | விடுதி சேர்க்கைக் கட்டணம் | ரூ.01 |
| 2 | விடுதி காப்புத் தொகை | ரூ.25 |
| 3 | விடுதி வாடகை கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ.200 |
| 4 | விடுதி பராமரிப்பு கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ.10 |

பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் உணவுடன் கூடிய விடுதி வசதிகள் பல இடங்களில் உள்ளன. இதில் குறிப்பிட்ட இடங்கள் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. விடுதியில் உள்ள இடவசதியை பொறுத்து தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**அட்டவணை** / Back to Index

## 17. மாணவர்களுக்கு பயிற்சி காலத்தில் வழங்கப்படும் சலுகைகள்

(அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும்மாணவர்களுக்கு மட்டும்)

| அ) அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு கீழ்கண்ட சலுகைகளை அரசு வழங்குகிறது. | |
|---|---|
| 1 | உதவித்தொகை ரூ.500/- மாதந்தோறும் (வருகை நாட்களுக்கு ஏற்ப) |
| 2 | பேருந்து கட்டண சலுகை |
| 3 | மிதிவண்டி |
| 4 | மடிக்கணினி |
| 5 | பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள் |
| 6 | செட் சீருடை |
| 7 | ஒரு செட் காலணி |

ஆ) தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ்கண்டவாறு பயிற்சி கட்டணத்தை அரசே வழங்குகிறது.

1. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ.12,000/- வீதம் அரசு பயிற்சிக்கட்டணம் வழங்குகிறது.
2. கிராமங்கள் மற்றும் பஞ்சாயத்துகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ.10,000/- வீதம் அரசு பயிற்சிக்கட்டணம் வழங்குகிறது.

## 18. முக்கிய அறிவுரைகள்:

விண்ணப்பம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும். சேர்க்கை கோரும் மாவட்டத்தை தெரிவு செய்து விண்ணப்பத்தை இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிய தேதிக்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மாவட்ட கலந்தாய்வுக்கு வருகை தருகையில் அசல் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாவிடில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். தமிழ்நாடு மாணவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு பொருந்தும். பழங்குடி இன மாணவர்கள் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து (Revenue Divisional Officer) சாதிச் சான்றிதழ் பெற வேண்டும்.

## 19. SCVT தொழிற்பயிற்சி நிலையங்கள்:

கீழ்காணும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாநில தொழிற்பயிற்சி குழும விதிகளின்படி (SCVT) பயிற்சி நடைபெறும்.

1. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், வேப்பலோடை, தூத்துக்குடி மாவட்டம்
2. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்
3. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
4. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்
5. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,போடி, தேனி மாவட்டம்
6. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,ஆனைக்கட்டி,கோயம்புத்தூர் மாவட்டம்
7. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,கொல்லிமலை,நாமக்கல் மாவட்டம்
8. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,கூடலூர், நீலகிரி மாவட்டம்
9. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஜமுனாமருத்தூர்,திருவண்ணாமலை மாவட்டம்
10. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,கருமந்துறை கிராமம், சேலம் மாவட்டம்.
11. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மணிகண்டம், திருச்சி மாவட்டம்
12. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், சின்ன சேலம், விழுப்புரம் மாவட்டம்
13. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், காட்டுமன்னார் கோயில், சிதம்பரம் மாவட்டம்
14. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்
15. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்
16. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்
17. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்
18. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மத்திய சிறை, திருச்சி, திருச்சி மாவட்டம்
19. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஆலத்தூர். பெரம்பலூர் மாவட்டம்

20. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம்
21. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்
22. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஆர்.கே.நகர், சென்னை மாவட்டம்
23. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், வடகரை,திருவள்ளூர் மாவட்டம்

பயிற்சி முடிவில் தேர்வுகள் நடத்தப்பட்டு மாநில அரசு (SCVT) சான்றிதழ்கள் வழங்கப்படும். **மத்திய அரசு சான்றிதழ் (NCVT) தேவைப்படின்** SCVT முறையில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் NCVT தேர்வு எழுதி தேர்ச்சி பெறவேண்டும்.

கீழ்க்கண்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிதாக துவங்கப்பட்டுள்ள தொழிற் பிரிவுகளில் மாநில முறைப்படி பயிற்சி நடைபெறும். இறுதியில் மாநில அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

| வ.எண் | அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | தொழிற்பிரிவின் பெயர் |
|---|---|---|
| 1. | அம்பாசமுத்திரம் | பற்றவைப்பவர் |
| 2. | நாகலாபுரம் | பற்றவைப்பவர் |
| | | கம்பியாள் |
| 3. | வடசென்னை | மின்சாரப்பணியாளர் |
| | | கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்ப வெப்பநிலை கட்டுப்படுத்துதல் |
| 4. | உளுந்தூர்ப்பேட்டை | மின்சாரப்பணியாளர் |
| | | கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் |
| 5. | தஞ்சாவூர் | மின்சாரப்பணியாளர் |
| 6. | செக்காணூரனி | மின்சாரப்பணியாளர் |
| 7. | கடலூர் | மின்சாரப்பணியாளர் |
| 8. | சிதம்பரம் | கம்பியாள் |
| 9. | தர்மபுரி | கம்பியாள் |
| 10. | மேட்டூர் அணை | கம்பியாள் |
| 11. | சேலம் | கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் |
| 12. | நாகர்கோயில் | கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் |
| 13. | கடலூர் | கப்பல் இயந்திர பொருத்துநர் (Marine Engine Fitter) |
| 14. | கோயம்பத்தூர் | எண்ணியல் புகைப்படக் கலைஞர் |
| 15. | பரமக்குடி | சூரிய சக்தியில் இயங்கும் சாதனங்கள் பராமரிப்பு |
| | | தையல் வேலை தொழில்நுட்பம் (மகளிர் மட்டும்) |
| 16. | போடி | மின்சாரப் பணியாளர் |
| 17. | அரக்கோணம் | கைப்பேசி தொழில்நுட்பம் |
| 18. | திண்டுக்கல் | கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் |
| 19. | திருச்சி | மின் தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டு இயக்குபவர் |
| 20. | சேலம் | வர்ணம் பூசுபவர் |

கீழ்கண்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் **காது கேளாதோர்மற்றும் வாய்பேசாதோருக்கான புதிய தொழிற்பிரிவுகள்** ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாநில முறைப்படி பயிற்சி நடைபெறும். இறுதியில் மாநில அரசு சான்றிதழ் வழங்கப்படும்

| வ.எண் | அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | தொழிற்பிரிவின் பெயர் |
|---|---|---|
| 1. | நாகர்கோயில் | பொறிப்பகுதி பொருத்துபவர் |
| 2. | உளுந்தூர்பேட்டை | பொறிப்பகுதி பொருத்துபவர் |

மாநில முறைப்படி (SCVT) தேர்வு எழுதுபவர்கள் தனித் தேர்வர்களாக மத்திய அரசு சான்றிதழுக்கான (NCVT) தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்

அட்டவணை / Back to Index

## 20. மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் இடங்கள்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் இடம் | |
|---|---|---|---|
| 1 | சென்னை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | வடசென்னை |
| 2 | கோயம்புத்தூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | கோயம்புத்தூர் |
| 3 | தர்மபுரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தர்மபுரி |
| 4 | திண்டுக்கல் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திண்டுக்கல் |
| 5 | ஈரோடு | அரசு தொழிற் பயிற்சி நிலையம் | ஈரோடு |
| 6 | காஞ்சிபுரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | செங்கல்பட்டு |
| 7 | கிருஷ்ணகிரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒசூர் |
| 8 | மதுரை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | மதுரை |
| 9 | நாமக்கல் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்) | நாமக்கல் |
| 10 | நீலகிரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | குன்னூர் |
| 11 | புதுக்கோட்டை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | புதுக்கோட்டை |
| 12 | இராமநாதபுரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | பரமக்குடி |
| 13 | சேலம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | சேலம் |
| 14 | சிவகங்கை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | சிவகங்கை |
| 15 | தேனி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தேனி |
| 16 | திருவள்ளூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | அம்பத்தூர் |
| 17 | திருவண்ணாமலை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருவண்ணாமலை |
| 18 | வேலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | வேலூர் |
| 19 | திருப்பூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருப்பூர் |
| 20 | கடலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | கடலூர் |
| 21 | விழுப்புரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | உளுந்தூர்பேட்டை |
| 22 | நாகப்பட்டினம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நாகப்பட்டினம் |
| 23 | அரியலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | அரியலூர் |
| 24 | தஞ்சாவூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தஞ்சாவூர் |
| 25 | திருச்சி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருச்சி |
| 26 | கரூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், (மகளிர்) | கரூர் |
| 27 | பெரம்பலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | பெரம்பலூர் |
| 28 | திருவாரூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நீடாமங்கலம் |
| 29 | கன்னியாகுமரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நாகர்கோவில் |
| 30 | திருநெல்வேலி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருநெல்வேலி |
| 31 | தூத்துக்குடி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தூத்துக்குடி |
| 32 | விருதுநகர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | விருதுநகர் |

அட்டவணை / Back to Index

பகுதி-1 இணைப்பு – 1 தொழிற் பிரிவுகளின் விவரங்கள்

## 21. பொறியியல் தொழிற் பிரிவுகள் (Engineering Trades)

கல்வித்தகுதி: 8-ம் வகுப்பு தேர்ச்சி

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | தச்சர் / Carpenter | 1 | 206 |
| 2 | கட்டுமான வேலை செய்பவர் / Mason (Building Constructor) | 1 | 211 |
| 3 | உலோகத் தகடு வேலையாள் / Sheet Metal Worker | 1 | 213 |
| 4 | பற்ற வைப்பவர் / Welder | 1 | 212 |
| 5 | கம்பியாள் / Wireman | 2 | 232 |
| 6 | வர்ணம் அடிப்பவர் (பொது) / Painter (General) | 2 | 059 |
| 7. | பற்றவைப்பவர், கட்டுருவாக்கம் மற்றும் பொருத்துதல் / Welder (Fabrication & Fitting ) | 1 | -- |
| 8. | பற்றவைப்பவர் (கட்டமைப்பு) / Welder (Structural) | 1 | -- |
| 9. | பற்றவைப்பவர் (GMAW & GTAW) / Welder (GMAW& GTAW) | 1 | -- |
| 10. | பற்றவைப்பவர் (குழாய்) / Welder (Pipe) | 1 | -- |
| 11. | பற்றவைப்பவர் (பற்றவைப்பு மற்றும் ஆய்வு) / Welder (Welding and Inspection) | 1 | -- |

பகுதி-1 இணைப்பு – 2 தொழிற் பிரிவுகளின் விவரங்கள்

## 22. பொறியியல் தொழிற் பிரிவுகள் (Engineering Trades)

கல்வித்தகுதி: 10-ம் வகுப்பு தேர்ச்சி

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | கட்டிடப் பட வரைவாளர் / Draughtsman (Civil) | 2 | 217 |
| 2 | இயந்திரப் பட வரைவாளர் / Draughtsman (Mechanical) | 2 | 224 |
| 3 | மின்சாரப் பணியாளர் / Electrician | 2 | 231 |
| 4 | கம்மியர் மிண்ணுவியல் / Electronic Mechanic | 2 | 219 |
| 5 | மின் முலாம் பூசுபவர் / Electroplater | 2 | 233 |
| 6 | பொருத்துநர் / Fitter | 2 | 227 |
| 7 | அச்சு வார்ப்பவர் / Foundryman Technician | 1 | 214 |
| 8 | தகவல் தொடர்பு தொழில் நுட்பம் மற்றும் சாதனங்கள்பராமரிப்பு / Information Communication Technology System Maintenance | 2 | 220 |
| 9 | கம்மியர் கருவிகள் / Instrument Mechanic | 2 | 037 |
| 10 | கம்மியர் கருவிகள் (இரசாயன சாதனம்) / Instrument Mechanic (Chemical Plant) | 2 | 038 |
| 11 | கம்மியர் மின் தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டு/ Lift and Escalator Mechanic | 2 | 234 |
| 12 | இயந்திர வேலையாள் / Machinist | 2 | 222 |
| 13 | இயந்திர வேலையாள் (அரவை) / Machinist Grinder | 2 | 223 |
| 14 | கம்மியர் பராமரிப்பு (இரசாயன சாதனம்) / Maintenance Mechanic (Chemical Plant) | 2 | 044 |
| 15 | கப்பல் இயந்திர பொருத்துநர் / Marine Engine Fitter | 1 | 013 |
| 16 | கம்மியர் விவசாய இயந்திரம் / Mechanic Agriculture Machinery | 2 | 216 |
| 17 | கம்மியர் ஆட்டோ எலக்டிரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் / Mechanic Auto Electrical & Electronics | 1 | 203 |
| 18 | கம்மியர் டீசல் எஞ்ஜின் / Mechanic Diesel Engine | 1 | 201 |

| | | | |
|---|---|---|---|
| 19 | கம்மியர் இயந்திரப் பராமரிப்பு / Mechanic Machine Tool Maintenance | 2 | 225 |
| 20 | கம்மியர் இயந்திரம் மற்றும் மின்னணுவியல் / Mechanic Mechatronics | 2 | 053 |
| 21 | கம்மியர் மோட்டார் சைக்கிள் / Mechanic Motor Cycle | 1 | 204 |
| 22 | கம்மியர் மோட்டார் வண்டி / Mechanic Motor Vehicle | 2 | 215 |
| 23 | கம்மியர் குளிர் பதனம் மற்றும் தட்ப வெப்ப நிலை கட்டுப்படுத்துதல் / Mechanic Refrigeration & Air Conditioner | 2 | 218 |
| 24 | கம்மியர் இயந்திரக் கலப்பை / Mechanic Tractor | 1 | 202 |
| 25 | பிளாஸ்டிக் வழிமுறை பணியாளர் / Plastic Processing Operator | 1 | 022 |
| 26 | பம்ப் இயக்குபவர் மற்றும் மெக்கானிக் / Pump Operator Cum Mechanic | 1 | 205 |
| 27 | நில அளவையாளர் / Surveyor | 1 | 207 |
| 28 | ஜவுளி இயந்திர மின்னணுவியல் / Textile Mechatronics | 2 | 236 |
| 29 | டெக்ஸ்டைல் வெட் பிராஸஸிங் டெக்னீஷியன் / Textile Wet Processing Technician | 2 | 237 |
| 30 | கருவி மற்றும் அச்சு செய்பவர் / Tool & Die Maker (Press Tools, Jigs & Fixtures) | 2 | 229 |
| 31 | கடைசல் பிடிப்பவர் / Turner | 2 | 221 |
| 32 | வர்ணம் அடிப்பவர் (தொழிற்சாலை) / Industrial Painter | 1 | - |
| 33 | தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் / Information Technology | 2 | - |
| 34 | கணிணி வன்பொருள் மற்றும் வலைதள பராமரிப்பாளர் / Computer Hardware and Networking Maintenance | 1 | - |
| 35 | குழாய் பொருத்துபவர் / Plumber | 1 | 209 |
| 36 | கட்டிடவியல் உதவியாளர் / Civil Engineering Assistant | 2 | - |
| 37 | பின்னலாடை தொழில் நுட்பவியலாளர் / Spinning Technician | 2 | 235 |

பகுதி –1 **இணைப்பு –3** தொழிற் பிரிவுகளின் விவரங்கள்

## 23. SCVT பொறியியல் தொழிற் பிரிவுகள் (Engineering Trades)

**கல்வித் தகுதி – 10ம் வகுப்பு தேர்ச்சி**

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | மாதிரி உருவக அமைப்பு செய்பவர் (மாநில பாடத்திட்ட முறைப்படி) / Pattern Maker (SCVT) | 2 | -- |
| 2 | கைப்பேசி தொழில்நுட்பம் (SCVT) / Mobile Phone Technology | 1 | - |
| 3 | சூரிய மின்சக்தி சாதனங்கள் பராமரிப்பு (SCVT) / Maintenance of Solar Equiment | 1 | - |

பகுதி– 2 **இணைப்பு–1**

## 24. பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகள் ( Non - Engineering Trades)

கல்வித் தகுதி: 8-ம் வகுப்பு தேர்ச்சி

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | தோல் பொருள் உற்பத்தியாளர் / Leather Goods Maker | 1 | 116 |
| 2 | காலணி உற்பத்தியாள் / Footwear Maker | 1 | 109 |

அட்டவணை / Back to Index

பகுதி– 2 இணைப்பு–2

25. பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகள் ( Non - Engineering Trades)

கல்வித்தகுதி: 10-ம் வகுப்பு தேர்ச்சி

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | கணினி உதவியுடன் பூத்தையல் மற்றும் வடிவமைத்தல் / Computer Aided Embroidery & Designing | 1 | 250 |
| 2 | கணினி இயக்குபவர் மற்றும் திட்ட உதவியாளர் / Computer Operator & Programming Assistant | 1 | 242 |
| 3 | டெஸ்க் டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் / Desk Top Publishing Operator | 1 | 243 |
| 4 | எண்ணியல் புகைப்படக் கலைஞர் / Digital Photographer | 1 | 102 |
| 5 | ஆடை தயாரித்தல் / Dress Making | 1 | 248 |
| 6 | நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் / Fashion Design Technology | 1 | 246 |
| 7 | உணவு தயாரிப்பவர் (பொது) / Food Production (General) | 1 | 253 |
| 8 | வரவேற்பு அலுவலக உதவியாளர் / Front Office Assistant | 1 | 254 |
| 9 | செயலகப் பயிற்சி (ஆங்கிலம்) / Secretarial Practice (English) | 1 | 258 |
| 10 | தையல் வேலை தொழில் நுட்பம் / Sewing Technology | 1 | 247 |
| 11 | சுருக்கெழுத்து மற்றும் செயலக உதவியாளர் (ஆங்கிலம்) / Stenographer & Secretarial Assistant (English) | 1 | 259 |
| 12 | அலங்கார பூத்தையல் தொழில் நுட்பம் / Surface Ornamentation Techniques (Embroidery) | 1 | 249 |
| 13 | உணவு மற்றும் குளிர்பானங்கள் உபசரிப்பு உதவியாளர் / Food and Beverages Service Assistant | 1 | 252 |
| 14 | மருத்துவமனை சுகாதார பராமரிப்பு / Hospital Housekeeping | 1 | 114 |
| 15. | பல்லூடகம் அசைவுக் காட்சியியல் மற்றும் சிறப்பு விளைவுகள் / Multimedia Animation & Special Effects | 1 | 244 |

பகுதி– 2 இணைப்பு–3

26. SCVT பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகள் ( Non - Engineering Trades)

கல்வித்தகுதி: 10-ம் வகுப்பு தேர்ச்சி

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | சுருக்கெழுத்து தட்டச்சர் (தமிழ்) (மாநில பாடத்திட்ட முறைப்படி) / Stenography (Tamil) (SCVT) | 1 | -- |
| 2 | லித்தோ ஆப்செட் மெஷின் மைன்டர் (SCVT) Litho Offset Machine Minder | 1 | -- |

பகுதி– 2 இணைப்பு–4

27. SCVT பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகள் ( Non - Engineering Trades)

கல்வித்தகுதி: 12-ம் வகுப்பு தேர்ச்சி

| வ. எண். | தொழிற் பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (ஆண்டு) | குறியீட்டு எண். |
|---|---|---|---|
| 1 | தீயணைப்புத் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்சாலை பாதுகாப்பு மேலாண்மை / Fire Technology and Industrial Safety Management. | 1 | – |

அட்டவணை / Back to Index

## பகுதி– 3 இணைப்பு–1

## பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டம் (PPP)

பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் (PPP) கீழ் கீழ்கண்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் நிறுவனங்களின் மேற்பார்வையில் கீழ்கண்ட புதிய தொழிற் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான சான்றிதழ்களும் NCVTமூலம் வழங்கப்படும்.

**28. பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின் (Public Private Partnership)–ன் கீழ் கீழ்க்கண்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

| வ. எண்; | தொழிற்பயிற்சி நிலையம் | தொழிற் பிரிவுகள் | | அலகுகள் |
|---|---|---|---|---|
| 1 | மேட்டூர் அணை | 1 | ஆடை தயாரித்தல் | 2 |
| 2 | சேலம் (மகளிர்) | 1 | வரவேற்பு அலுவலக உதவியாளர் | 1 |
| | | 2 | கட்டிடப்பட வரைவாளர் | 1 |
| | | 3 | மருத்துவமனை சுகாதார பராமரிப்பு | 1 |
| | | 4 | கம்மியர் மின்னணுவியல் | 1 |
| 3. | திருப்பூர் | 1 | கணினி இயக்குபவர் மற்றும் திட்ட உதவியாளர் | 2 |
| 4. | குன்னூர் | 1 | பற்றவைப்பவர் | 2 |
| | | 2 | பொருத்துநர் | 1 |
| 5. | ஈரோடு | 1 | கட்டிடப்பட வரைவாளர் | 1 |
| | | 2 | கணினி இயக்குபவர் மற்றும் திட்ட உதவியாளர் | 2 |
| 6. | நாகர்கோவில் | 1 | பற்றவைப்பவர் | 2 |
| | | 2 | பொருத்துநர் | 1 |
| 7. | விருதுநகர் | 1 | பற்றவைப்பவர் | 2 |
| 8. | கடலூர் (மகளிர்) | 1 | அலங்கார பூத்தையல் தொழில் நுட்பம் | 2 |
| 9 | நீடாமங்கலம் | 1 | பற்றவைப்பவர் | 4 |
| 10. | உளுந்தூர்பேட்டை | 1 | பற்றவைப்பவர் | 2 |
| | | 2 | கணினி இயக்குபவர் மற்றும் திட்ட உதவியாளர் | 2 |
| 11. | சிதம்பரம் | 1 | பொருத்துநர் | 1 |
| | | 2 | பற்றவைப்பவர் | 2 |
| 12. | சங்கராபுரம் | 1 | பொருத்துநர் | 1 |
| | | 2 | கப்பல் இயந்திரப் பொருத்துநர் | 2 |
| 13. | செக்கணுாரணி | 1 | கடைசலர் | 1 |
| 14. | திண்டுக்கல் (மகளிர்) | 1 | அலங்கார பூத்தையல் தொழில் நுட்பம் | 2 |
| | | 2 | நவீன ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பம் | 2 |
| 15. | தேனி | 1 | டெஸ்க் டாப் பப்ளிசிங் ஆப்பரேட்டர் | 1 |
| | | 2 | கணினி இயக்குபவர் மற்றும் திட்ட உதவியாளர் | 1 |
| 16 | ஆண்டிப்பட்டி (மகளிர்) | 1 | ஜவுளி இயந்திர மின்னனுவியல் | 1 |
| | | 2 | தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் சாதனங்கள் பராமரிப்பு | 1 |
| 17. | மதுரை (மகளிர்) | 1 | தையல் வேலை தொழில் நுட்பம் | 2 |
| 18. | பரமக்குடி | 1 | பின்னலாடை தொழில்நுட்பவியலாளர் | 2 |
| 19. | புள்ளம்பாடி (மகளிர்) | 1 | பல்லூடகம் அசைவுக் காட்சியியல் மற்றும் சிறப்பு விளைவுகள் | 2 |

## பகுதி– 3 இணைப்பு–2

**திறன்மிகு தொழிற்பயிற்சி மையம்(Centre of Excellance)**

கீழ்கண்ட 7 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கீழ்குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் திறன் மையங்களாக செயல்படுகின்றன. இத்தொழிற்பிரிவுகள் இரண்டு வருட தொழிற்பிரிவுகளாகும். பயிற்சியாளர் முதல் வருட பயிற்சியினை முடித்தவுடன் சான்றிதழ் பெறலாம், பின்னர் தேவைப்படும்போது இரண்டாம் வருடத்தினை தொடர்ந்து, இரண்டாவது வருடத்திற்கான சான்றிதழ் பெறலாம்.

| வ. எண | தொழிற்பயிற்சி நிலையம் | Sector | மொத்த இருக்கைகள் |
|---|---|---|---|
| 1 | அரசு தொழிற்பயிற்சி நிலையம் வடசென்னை | கட்டுமானம் மற்றும் மரவேலை / Construction and Wood Work | 125 |
| 2 | அரசு தொழிற்பயிற்சி நிலையம் தாராபுரம் | உற்பத்தி மற்றும் தயாரிப்பு / Production and Manufacturing | 125 |
| 3 | அரசு தொழிற்பயிற்சி நிலையம், செங்கல்பட்டு | | 125 |
| 4 | அரசு தொழிற்பயிற்சி நிலையம், கோயம்புத்தூர் | | 125 |
| 5 | அரசு தொழிற்பயிற்சி நிலையம், வேலூர் | தோல் பொருள்கள் மற்றும் காலணிகள் / Leather Goods and Foot Wear | 125 |
| 6 | அரசு தொழிற் பயிற்சி நிலையம், கடலூர் | பிளாஸ்டிக் வழிமுறை பணியாளர் / Plastic Processing Operator | 125 |
| 7 | அரசு தொழிற் பயிற்சி நிலையம், திருநெல்வேலி | மின்னியல் / Electrical | 125 |

## பகுதி– 4

### 29.(BTC)அடிப்படை பயிற்சி மையங்களில் நடத்தப்படும் தொழிற் பிரிவுகள் :

அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களைப் போன்று, சில தொழிற்சாலைகள் தங்களது நிறுவனங்களில் அடிப்படைப் பயிற்சி மையங்கள் (Basic Training Centre) என்ற பயிற்சி நிலையங்களை நடத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை பயிற்சி மையங்களில், ஐடிஐ படிப்பிற்கான பாடங்களில் பயிற்சி வழங்கப்படுவதுடன், இறுதி வருடத்தில் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களில் நேரடிப்பயிற்சி பெறும் தொழிற்பழகுநர் பயிற்சிகளும் அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரூ.7000/– முதல் 9000/– வரை தொழிற்பிரிவுகளுக்கு ஏற்ப உதவித் தொகையும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் மத்திய அரசால்அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வு நடத்தப்பட்டு நேரடியாக தொழிற்பழகுநர் சான்றிதழ் (National Apprenticeship Certificate) தேர்ச்சி பெற்றோருக்கு மத்திய அரசால் வழங்கப்படும். பயிற்சி பெறுபவர்களை சம்பந்தப்பட்ட தொழிற் நிறுவனங்கள் தங்களது நிரந்தரப் பணிக்கு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பும் பிற துறைகளிலும் வேலைக்குச் செல்லும் தகுதியும் வாய்ப்பும் உள்ளது.

| Sl. No | Name of the Establishment (நிறுவனத்தின் பெயர்) | Name of the Trade (தொழிற் பிரிவு) | No. of Apprentices (தொழிற் பழகுநர் எண்ணிக்கை) | பயிற்சிக் காலம் (ஆண்டு) | Educational Qualification (கல்வித்தகுதி) |
|---|---|---|---|---|---|
| | **Pudukkottai / புதுக்கோட்டை** | | | | |
| 1 | M/s Rane TRW Steering Systems P Ltd, Plant-I F1-Gear Division Viralimalai 621316 M/s.ரானே டி.ஆர்.டபிள்யூ ஸ்டீரியரிங் சிஸ்டம் (பி) லிமிடெட், விராலிமலை | 1.Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2.Machinst Grinder / இயந்திர வேலையாள் (அரவை) | 16 | 3 | 10th |
| | | 3.TDM (Jigs& Fixtures) / கருவி மற்றும் அச்சு செய்பவர் (Jigs&Fixtures) | 21 | 3 | 10th |

| Sl. No | Name of the Establishment (நிறுவனத்தின் பெயர்) | Name of the Trade (தொழிற் பிரிவு) | No. of Apprentices | பயிற்சிக் காலம் (ஆண்டு) | Educational Qualification (கல்வித்தகுதி) |
|---|---|---|---|---|---|
| | **Coimbatore / கோயம்புத்தூர்** | | | | |
| 2 | M/s Lakshmi Machine Works Ltd. PerianaickenPalayam Coimbatore M/s.லட்சுமி மெசின் ஒர்க்ஸ் லிட், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | 1.Machinst / இயந்திர வேலையாள் | 31 | 3 | 10th |
| | | 2. Turner / கடைசல் பிடிப்பவர் | 31 | 2 | 10th |
| | **Krishnagiri / கிருஷ்ணகிரி** | | | | |
| 3 | M/s Titan & Co, No- 3.Sipcot Industrial Complex Hosur -635126 M/s.டைட்டன் அண்ட் கோ, ஒசூர் | 1. Fitter / பொருந்துநர் | 42 | 2 | 10th |
| 4 | M/s Ashok Leyland Limited, Sipcot –II, Kumudhapalli, Hosur-635109 Phone No: 04344-269200 M/s.அசோக் லேலண்ட் லிமிடெட், ஒசூர். | 1.Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2.MMV / கம்மியர் மோட்டார் வாகனம் | 21 | 2 | 10th |
| | | 3. Painter G வர்ணம் பூசுபவர் (பொது) | 21 | 3 | 10th |
| | | 4.Welder(Gas &Electric) பற்றவைப்பவர் (கேஸ் &எலக்ட்ரிக்) | 21 | 2 | 8th |
| 5 | M/s Wendt India Limited CUMI Centre For Skill Development (CCSD) Hosur 635126 Telephone - 04344-405700 M/s.வென்ட் இன்டியா லிமிடெட், ஒசூர். | 1.Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2.Machinist Grinder இயந்திர வேலையாள் (அரவை) | 16 | 3 | 10th |
| | | 3.Electrician / மின்சார பணியாள் | 16 | 2 | 10th |
| | | 4.MMTM / கம்மியர் இயந்திர பராமரிப்பு | 21 | 2 | 10th |
| | | 5.Turner | 16 | 2 | 10th |
| | **Kancheepuram / காஞ்சிபுரம்** | | | | |
| 6 | M/s Rane Engine Valve Ltd. No.5 Noble Street Post Box No.1305 Alandur Chennai - 600016 M/s.ரானே எஞ்சின் வால்வே லிமிடெட், ஆலந்தூர், சென்னை | 1.FHT / போர்ஜர் அண்ட் ஹீட் ட்ரீட்டர் | 21 | 3 | 10th |
| | | 2.Machinist / இயந்திர வேலையாள் | 16 | 3 | 10th |
| | | 3.Machinist Grinder இயந்திர வேலையாள் (அரவை) | 16 | 3 | 10th |
| | | 4.Welder(Gas &Electric) பற்றவைப்பவர் (கேஸ் &எலக்ட்ரிக்) | 12 | 2 | 8th |
| 7 | M/s Toshiba Machines (Chennai) Pvt Ltd. P. O Box No.5 Off Chennai - BangaloreHighway Chembarabakkam Chennai-600123 (M/s.டோசிபா மெசின்ஸ் (பி)லிமிடெட் செம்பரம்பாக்கம், சென்னை | 1.Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2. Machinist Grinder இயந்திர வேலையாள் (அரவை) | 16 | 3 | 10th |
| 8 | M/s India Pistons RB Unit Plot No -1 , No 13&16 Sengunram Industrial Area Maraimalai Nagar M/s.இண்டியா பிஸ்டன்ஸ் ஆர்.பி.யூனிட் மறைமலைநகர் | 1. Foundryman அச்சு வார்ப்பவர் | 42 | 3 | 8th |

| Sl. No | Name of the Establishment (நிறுவனத்தின் பெயர்) | Name of the Trade (தொழிற் பிரிவு) | No. of Apprentices | பயிற்சிக் காலம் (ஆண்டு) | Educational Qualification (கல்வித்தகுதி) |
|---|---|---|---|---|---|
| 9 | M/s Sharada Motors IndustriesLtd. Plot No-12 Ist Avenue, Mahindra World City, NathhamSubpost Chenglepet Taluk. Kanchipuram District 603002 Mobile No 9941191798 M/s சாரதா மோட்டார்ஸ்இன்டஸ்டிரிஸ் லிமிடெட் மகேந்திர வேர்ல்டு சிட்டி, செங்கல்பட்டு | 1.SMW / உலோகத்தகடு வேலையாள் | 21 | 3 | 8th |
| | | 2.Welder (Gas & Electric) / பற்றவைப்பவர் (கேஸ் & எலக்ட்ரிக்) | 42 | 2 | 8th |
| 10 | M/s India Pins&liners Ltd. A1-C Industrial Estate Maraimalai Nagar Kanchipuram District 603209 Mobile No -8056031200 M/sஇண்டியா பின்ஸ் அண்ட் லைனர்ஸ் லிமிடெட், மறைமலைநகர் | 1. Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| 11 | M/s Rane Madras Ltd AmbakkamVaranavasiVillage& Post Kanchipuram-631604 Phone No .044-42267800 M/s. ரானே மெட்ராஸ் லிமிடெட், காஞ்சிபுரம் | 1. Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2. Machinist / இயந்திர வேலையாள் | 16 | 3 | 10th |
| | | 3. Machinist Grinder இயந்திர வேலையாள் (அரவை) | 16 | 3 | 10th |
| | | 4.Turner / கடைசலர் | 16 | 2 | 10th |
| 12 | M/s Larsen& Toubro Construction & Mining Machinery, Earth Moving Machinery service Station Nirvalur Village &Post via Enathur Kanchipuram- 631561 M/s.லார்சன் அண்ட் டியூப்ரோ கன்ஸ்ட்ரக்சன் அண்ட் மைனிங் மெசினரி, எர்த் மூவிங் மெசினரி சர்வீஸ் ஸ்டேசன், காஞ்சிபுரம் | 1. MEMM ( Mechanic Earth Moving Machinery) | 21 | 4 | 10th |
| 13 | M/s Hinduja Foundries . Plot No,K-2 Sipcot Industrial Estate Arneri Village Sriperumpudur-602105 M/sஹிந்துஜா பவுண்டரிஸ், ஸ்ரீபெரும்புதூர் | 1.Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2.Foundryman / அச்சு வார்ப்பவர் | 21 | 3 | 8th |
| | | 3.PatternMaker / மாதிரி உருவக அமைப்பு செய்பவர் | 21 | 3 | 8th |
| 14 | M/s Tube Products India Limited,Post Box No 4, CTH Road, Avadi, Chennai 74 M/s டியூப் புராடக்ட்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை | 1.Fitter / பொருத்துநர் | 21 | 2 | 10th |
| | | 2.Welder / பற்ற வைப்பவர் | 48 | 2 | 8th |

| | |
|---|---|
| **30.** மாவட்ட வாரியாக அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை தொழிற்பிரிவுகளுடன் அற்ந்து கொள்ள.. இங்கே கிளிக் செய்யவும் | Home Page "View ITI Details" menu Click Here |

அட்டவணை / Back to Index